2022 ஏப்ரல் 25]

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளி, கல்லூரி மாணவர்கள் செல்வதற்கான வழித்தடங்களில், கூடுதல் வழித்தடம் கேட்பதும், நடைகளை அதிகரிப்பதற்கான கோரிக்கைகளும் தொடர்ந்து பரவலாக வந்து கொண்டிருக்கின்றன. எனவே, இதுகுறித்து துறையிலிருந்து அந்தக் கல்லூரி நிருவாகத்தோடு பேசி, பல இடங்களில் அதற்குத் தேவையானவற்றைச் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. வேல்முருகன் அவர்கள், அவருடைய குறிப்பிட்ட கோரிக்கையை எழுதித் தந்தால் அதுகுறித்து ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 170, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

170—

குடமுழுக்கு

***3124—திரு. இரா. மாணிக்கம்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளித்தலை தொகுதி, குளித்தலை அருள்மிகு கடம்பவனேஸ்வரர் திருக்கோயிலுக்குக் குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

அருள்மிகு கடம்பவனேஸ்வரர் திருக்கோயில் குளித்தலையிலே இருக்கின்ற ஓர் ஆலயமாகும். அங்கே நீராடிச் சென்றால் காசிக்கு நிகரான ஒரு நீராடலும், காசி விசுவநாதரைத் தரிசித்ததுமாக ஓர் ஐதீகம் உண்டு. அந்தக் கோயிலின் திருப்பணிகளுக்கு மண்டல அளவிலான குழுவில் ஒப்புதல் பெறப்பட்டு, மாநில அளவிலான தொல்லியல் குழுவிலும் ஒப்புதல் பெறப்பட்டு, சுமார் 20 பணிகள் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டு அளவில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி நிறைவடைந்து, அவர் கோரியபடி, வருகின்ற 16-6-2022 அன்று பாலாலயம் செய்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது என்கின்ற மகிழ்ச்சியான செய்தியை

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம் அவர்கள்.

திரு. இரா. மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருள்மிகு கடம்பவனேஸ்வரர் திருக்கோயில் குளித்தலை நகரத்தில் அமைந்துள்ளது. இந்தத் திருக்கோயிலானது காசிக்கு அடுத்ததாக வடக்கு நோக்கி அமைந்துள்ள சிவதலமாக விளங்குவதால் இந்தத் திருக்கோயிலை 'தக்ஷிணகாசி' என்ற சிறப்புப் பெயரில் அழைக்கின்றனர். திருநாவுக்கரசர் மற்றும் அருணகிரிநாதரால் புகழ்ந்து பாடப்பட்ட, சிறப்புப் பெற்ற திருத்தலமாக இந்தத் திருக்கோயில் விளங்குகிறது. ஆண்டுதோறும் தை மாதம் பௌர்ணமி அன்று நடைபெறும் தைப் பூசத் திருவிழா மிகப் பிரம்மாண்டமாக இரண்டு இலட்சம் மக்கள் கூடுகின்ற ஒரு பெரிய திருவிழாவாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எப்போதெல்லாம் கழக ஆட்சி வருகிறதோ அப்போதுதான் இந்தத் திருக்கோயிலுக்குக் குடமுழுக்கு நடைபெற்றிருக்கிறது. 1998 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் கழக ஆட்சிக் காலத்தில்தான் இந்தத் திருக்கோயிலுக்குக் குடமுழுக்கு நடைபெற்றது. அதைப்போல, நம்முடைய மாண்புமிகு முதல்வர், தலைவர் தளபதி அவர்கள் ஆட்சியிலே இந்தத் திருக்கோயிலுக்குக் குடமுழுக்கு நடத்தப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், அய்யர் மலை திருக்கோயிலில் Rope Car வசதி தொடர்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்ததுபோல, கடந்த 16 ஆம் தேதி அந்த Rope Car வெள்ளோட்டம் விடப்பட்டது. அந்தப் பகுதி மக்களெல்லாம் மிகுந்த மகிழ்ச்சியோடு இருக்கின்றனர். (மேசையைத் தட்டும் ஒலி) அது எப்போது மக்கள் பயன்பாட்டிற்கு வரும் என்கின்ற ஆவலோடு இருக்கின்றார்கள். ஆகவே, அந்த Rope Car எப்போது மக்களின் பயன்பாட்டிற்கு வரும் என்பதைத் தங்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அய்யர்மலை, அருள்மிகு இரத்தினகிரீஸ்வரர்

2022 ஏப்ரல் 25]

திருக்கோயில் 1,310 படிகள் கொண்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், அந்த மாவட்டத்தின் மாண்புமிகு அமைச்சர் அன்பிற்கினிய திரு. V. *செந்தில்பாலாஜி அவர்களும் வைத்த கோரிக்கையை ஏற்று கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அந்த மலைக்கு கால்நடையாகவே நடந்து சென்று சாமி தரிசனம் செய்தோம்.* Rope Car *வசதி பணிகள் என்பது 2016 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டாலும் பல்வேறு வகைகளில் கடந்த காலங்களில் அதை விரைவுபடுத்துகின்ற முயற்சியைத் தவறவிட்டதால், நாங்கள் 16–6–2021 அன்று அந்த* Rope Car *பணிகளை கள ஆய்வு செய்தோம். இந்த மாதம் 16 ஆம் தேதி நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் அந்த* Rope Car-*லே முதல் வெள்ளோட்டத்திற்கு அனுமதிக்கப்பட்டார். தொடர்ந்து அந்த* Rope Car-*ஐ பயன்படுத்துகின்ற பக்தகோடிகளுக்குக் கழிப்பறை வசதி, குடிநீர் வசதி இல்லையென்ற கோரிக்கை வரப்பெற்றதால், கழிப்பறை வசதி செய்து தருவதற்கும், குடிநீர் வசதி செய்து தருவதற்கும் துறையின் சார்பில் அனுமதி வழங்கப்பட்டு நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இன்னும் மூன்று மாதக் காலங்களில் அந்த* Rope Car *வசதி மக்கள் பயன்பாட்டுக்கு அளிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம் அவர்கள்.*

திரு. இரா. மாணிக்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்று மாதக் காலத்திலே அய்யர் மலை* Rope Car *மக்கள் பயன்பாட்டுக்கு வரும் என்ற ஓர் அருமையான, மகிழ்ச்சியான அறிவிப்பினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். உள்ளபடியே அது குளித்தலை மக்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியான அறிவிப்பாகும். அதேபோல குளித்தலை தொகுதி, தோகைமலை ஒன்றியம், ராச்சாண்டார் திருமலை என்ற ஊரில் சோழ மன்னர்களால் 16 ஆம் நூற்றாண்டில் 1081 ஆம் ஆண்டு கட்டப்பட்ட விராச்சிலை ஈஸ்வரன் திருக்கோயில் உள்ளது. அந்தத் திருக்கோயிலின் பழமையான அழகிய சிற்ப வேலைகள் நிறைந்த திருத்தேர் பழுதடைந்துள்ளது. திருப்பணி* Committee *மூலம் தேரைச் சீரமைக்கும் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. தேரோட்டம் சுமார் 30 ஆண்டுகளாக நடைபெறவில்லை. தேர் பவனி வரும் வீதிகள் மிகவும் பழுதடைந்துள்ளன. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு*

[2022 ஏப்ரல் 25

கருங்கற்களால் கட்டப்பட்ட கோயிலின் மண்டபங்களின் உட்புற சுவர்களில் வெடிப்பு ஏற்பட்டு பழுதடைந்துள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தேரைச் சீரமைக்கத் தேவையான நிதியினை வழங்கியும், தேர் பவனி வரும் வீதியைச் சீர்படுத்தி சிமெண்ட் சாலை அமைத்தும், சேதமடைந்துள்ள கோயில் மண்டபத்தைப் புதுப்பித்தும் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ராச்சாண்டார் திருமலை திருக்கோயிலுக்கு, 1981 ஆம் ஆண்டு மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பொன்னர் சங்கர் கதை எழுதுகின்ற காலத்திலே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் மாணிக்கம், கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. இரா. மாணிக்கம்: வருகைத் தந்து சிறப்புச் சேர்த்தார்கள் என்பதையும் இந்த நேரத்தில் பதிவு செய்து, அந்தத் திருக்கோயிலுக்குத் தேவையான நிதியைத் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடும் ஈஸ்வரன் திருக்கோயில் என்பது பரம்பரை அறங்காவலர் கொண்ட திருக்கோயில். 2016 ஆம் ஆண்டு துறையின் எந்த அனுமதியும் பெறாமல் தன்னிச்சையாக அவர்களே தேரிலுள்ள அழகிய சிற்பங்களை அகற்றிவிட்டு வேலை செய்ய ஆரம்பித்தார்கள். நிருவாக அனுமதியும் பெறவில்லை. அதேபோன்று அந்தச் சாலை 12 அடி அகலம் கொண்ட சாலையாக இருக்கிறது. அந்தத் திருத்தேர் சுற்றி வரவேண்டுமென்றால் 18 அடி சாலை தேவைப்படுகின்றது. மாவட்ட ஆட்சியருக்கு இந்து சமய அறநிலையத் துறை கருத்துரை வழங்கியிருக்கின்றது. சாலை அமைக்கும் பணிக்கும் தேவையான நிதியை இந்து சமய அறநிலையத் துறை ஏற்றுக்கொள்வதாக அறிவித்திருக்கின்றது. அந்தத் திருத்தேருக்கு மேலும் கூடுதலான நிதி தேவை என்று கேட்டிருக்கிறார்கள். தொல்லியல் துறையினரை அங்கே அனுப்பி நேரடியாக கள ஆய்வு மேற்கொள்ளச் செய்திருக்கிறோம். தேவைப்பட்டால், இந்து சமய அறநிலையத் துறை சார்பிலே நிதியும் வழங்கப்பட்டு, அந்த அழகிய சிற்பங்களும் பொருத்தப்பட்டு அந்தத் தேரை மிக விரைவில் தேர் பவனிக்குக்

2022 ஏப்ரல் 25]

கொண்டுவரச் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். கடந்த காலங்களில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையினுடைய அனுமதியைப் பெறாமல் அந்தப் பரம்பரை அறங்காவலர் தன்னிச்சையாக எடுத்த நடவடிக்கைக்கு விளக்கம் கேட்டு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை சார்பிலே அவருக்கு notice *அனுப்பப்பட்டிருக்கின்றது. வெகுவிரைவில் அந்தத் தேரும், தேரோட்டத்திற்கான வெள்ளோட்டமும், தேர் பவனியும் நடைபெறும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். கரூர் மாவட்டத்தில் மட்டும், அதாவது திருப்பூர் மண்டல இணை ஆணையர் அலுவலகத்தின் மூலமாக 109 பணிகள் 21 கோடி ரூபாய் செலவிலும், 4 நந்தவனங்கள் 15 இலட்சம் ரூபாய் செலவிலும் திருப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்ற தகவலையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பண்ணாரி அவர்கள்.*

திரு. அ. பண்ணாரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். பவானிசாகர் தொகுதியில் சத்தியமங்கலத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீபண்ணாரி அம்மன் திருக்கோயிலுக்கு இராஜகோபுரம் கட்டித் தர அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ணாரி அம்மன் திருக்கோயிலைப் பொறுத்தளவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்பேரில் இந்து சமய அறநிலையத் துறையின் மானியக் கோரிக்கை விவாதம் நடைபெறுகின்ற 4 ஆம் தேதி பாருங்கள். அன்றைக்கு பல்வேறு வகையான அறிவிப்புகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வெளியிடச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் உள்ளம் குளிர்ந்து, நம்முடைய பாரதிய*

ஜனதா கட்சியினுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் அன்புக்குரிய திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள் பாராட்டியதுபோல், வெள்ளை மனதோடு அன்றையதினம் உங்களுடைய பாராட்டு எங்களுக்குக் கிடைக்கும் வகையில் அறிவிப்புகள் இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ.செ. வில்வநாதன் அவர்கள்.

திரு. அ.செ. வில்வநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். எனது ஆம்பூர் தொகுதி, ஆம்பூர் நகரிலுள்ள அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில் மற்றும் அருள்மிகு பெரிய ஆஞ்சநேயர் திருக்கோயில், ஆம்பூர் வட்டம், மாதனூர் ஊராட்சி ஒன்றியம் துத்திப்பட்டு கிராமத்தில் உள்ள பிரசித்தி பெற்ற அருள்மிகு பிந்துமாதவ வரதராஜ பெருமாள் திருக்கோயில் ஆகிய கோயில்களுக்கு நீண்ட ஆண்டுகளாகக் குடமுழுக்கு நடத்தப்படாமல் உள்ளது. திருக்கோயில்களுக்கு முக்கியத்துவம் தந்துகொண்டிருக்கும் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆட்சியில் இத்திருக்கோயில்களுக்குக் குடமுழுக்கு நடத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், கடந்த 2021–2022 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையிலும், அதேபோன்று, 2022–2023 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையிலும் தலா 100 கோடி ரூபாய் நிதியை திருக்கோயில் திருப்பணிகளுக்காக ஒதுக்கீடு செய்திருக்கின்றார்கள். அதிலும், குறிப்பாக இந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட 100 கோடி ரூபாய் நிதியைப் பயன்படுத்தி, ஆயிரம் ஆண்டுகள் பழமையான திருக்கோயில்களுக்குத் திருப்பணிகள் மேற்கொள்ள வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கின்றார்கள்.

2022 ஏப்ரல் 25]

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நாகநாதசுவாமி திருக்கோயில் மற்றும் பிந்துமாதவ வரதராஜ பெருமாள் திருக்கோயில் ஆகிய கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். நம்முடைய பேரவை முன்னவர் அவர்களும், நம்முடைய மாவட்டச் செயலாளர் அன்பிற்கினிய திரு. நந்தகுமார் அவர்களும் கோயில் திருப்பணிகள் குறித்து ஏற்கெனவே கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அந்தப் பணிகளை இந்த 2022–2023 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் எடுத்துக்கொள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட அனைத்து திருக்கோயில்களும் திருப்பணிகளுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, வெகு விரைவில் கும்பாபிஷேகம் நடத்தப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி அவர்கள்.*

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதி, வார்டு எண் 74, ஏகாங்கிபுரம் பகுதியில் அமைந்திருக்கின்ற சேமாத்தம்மன் திருக்கோயில் வளாகத்தினுள் அமைந்திருக்கின்ற விழா மண்டபத்தின் மேற்கூரையைச் சீரமைத்துத் தருமாறும், அதன் அருகில் அமைந்திருக்கின்ற கோயிலுக்குச் சொந்தமான குளத்தைத் தூர்வாரி, சுத்தப்படுத்தி, சுற்றுச் சுவர் எழுப்பி, படிக்கட்டுகள் அமைத்து, மேம்படுத்தித் தருமாறும் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி சேமாத்தம்மன் திருக்கோயில் என்பது ஏகாங்கிபுரம் பகுதியில் அமைந்திருக்கின்றது. இத்திருக்கோயிலில் 2017 ஆம் ஆண்டுதான் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, குடமுழுக்கு நடைபெற்றிருக்கின்றது. திருப்பணியின்போது மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் பல விடுபட்டிருக்கின்றன. கோயிலின்*

சுற்றுச் சுவர் சிதிலமடைந்திருக்கிறது. அருகாமையிலிருக்கின்ற குளம் சிதிலமடைந்திருக்கின்றது. இந்த இரண்டு பணிகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, வருகின்ற மானியக் கோரிக்கையிலே அந்தப் பணிகளும் சேர்த்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 171, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரூபி ஆர். மனோகரன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

171—

குழந்தைகள் நூலகப் பிரிவு

***3285—திரு. ரூபி ஆர். மனோகரன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரியில் உள்ள நூலகத்தில் நவீன வசதியுடன்கூடிய குழந்தைகள் பிரிவு துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்கி, தங்களுடைய அனுமதியோடு விடையளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி கிளை நூலகம் 31–5–1954–ல் துவக்கப்பட்டு, பின்னர் 20–8–2008 முதல் முழுநேர கிளை நூலகமாகத் தரமுயர்த்தப்பட்டு, 920 சதுர அடி பரப்பளவு கொண்ட சொந்தக் கட்டடத்தில் நூல் இரவல் பிரிவு, நாளிதழ்/பருவ இதழ் பிரிவு, போட்டித் தேர்வு பயிற்சி மையம் ஆகிய பிரிவுகளுடன் செயல்பட்டு வருகிறது. தற்போது, இந்நூலகத்திற்கு நாங்குநேரி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.6.00 இலட்சம் மதிப்பில் 480 சதுர அடியில் கூடுதல் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இந்நூலகத்திற்கு முதற்கட்டமாக 5 கணினிகள் 28–3–2022 அன்று வழங்கப்பட்டுள்ளன. மேலும், அக்கட்டடத்தில் குழந்தைகளுக்கான